# ஜோன்டியூவின் பயன்பாட்டுவாதக் கற்பித்தல் முறைகளும் கனிஷ்ட இடைநிலைப்பிரிவு வகுப்பறைகளில் அவற்றின் பிரயோகமும் ஏறாவூர்ப்பற்றுப் பிரதேசப் பாடசாலைகளை மையப்படுத்திய ஓர் ஆய்வு

ஜெயநந்தினி ஏ, செல்வராஜா

முழுமையான விருத்தியுள்ள மாணவர்களை உருவாக்குவதில் ஆசிரியர்களின் கற்பித்தல் முறைகளும் செல்வாக்குச் செலுத்துகின்றன. ஆசிரியர்களின் சிறந்த கற்பித்தல் முறைகள் தொடர்பாகப் பல்வேறு கல்வியியலாளர்கள் பல்வேறுபட்ட கருத்துக்களை முன்வைத்துள்ளனர். அந்த வகையில் தத்துவார்த்த விளக்கங்களை முன்வைக்கும் கோட்பாடுகளில் அண்மைக் காலத்தில் வளர்ச்சியடைந்த கோட்பாடே பயன்பாட்டுவாதம் எனலாம். இது அமெரிக்கத் தத்துவ ஞானிகளான ஜோன்டியூவி, சீ.எஸ் பியர்ஸ், வில்லியம் ஜேம்ஸ், சில்லர் ஆகியோரின் கருத்துக்களின் வெளிப்பாட்டால் உருவாக்கம் பெற்றதாகும். மாற்றமடைகின்ற அநித்தியமான உலகத்திலே மாற்றமடையாத நோக்கங்கள் இருக்கமுடியாது என்பது பயன்பாட்டு வாதிகளின் பிரதான கருத்தாகும்.

பயன்பாட்டுவாதத்தின் இத்தகைய கருத்துக்கள் இன்று மிகவும் வரவேற்கப்படுகின்றன. காரணம் குழந்தையின் நிகழ்காலத் தேவைகளை நிறைவேற்றாத கல்வி முறை நடைமுறையில் இல்லாத போது பயன்பாட்டு வாதக் கருத்துக்கள் இயல்பாகவே முனைப்புப்பெறும். குழந்தையின் தேவைகளை நிறைவேற்றாத கல்வி வீணானதேயாகும். எனவேதான் பயன்பாட்டுவாதம் பிள்ளையின் நிகழ்காலத் தேவை எதுவோ அதைக் கல்வியானது நிறைவாக்க வேண்டும் என்கின்றது. அதற்கேற்ப ஆசிரியர்களின் கற்பித்தல் முறைகளும் மிக மிக முக்கியமானவை. ஆசிரியர்களின் கற்பித்தல் முறைகள் சிறப்பானதாக அமையும் போதே மாற்றமடைகின்ற உலகிற்கு ஏற்ப பொருத்தப்பாடுடைய மாணவர்களை உருவாக்க முடியும் என்பது தெட்டத்தெளிவு. அந்தவகையில் ஜோன்டியூவியின் கற்பித்தல் முறைகளில் காணப்படும் விடயங்கள் எந்தளவிற்குத் தற்காலத்தில் உள்ள பாடசாலைகளில் 06-08 வரையான தரங்களை உள்ளடக்கிய கனிஷ்ட இடைநிலைப்பிரிவு வகுப்பறைகளில் காணப்படுகின்றன் என்பதை வெளிக்கொண்டு வருவதாகவே இவ் ஆய்வு அமைகின்றது. இதற்காக மட்டக்களப்புப் பாடசாலைகளில் காணப்படும் ஏறாவூர்ப் பற்றுப் பிரதேசத்தில் உள்ள 03 பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. அப்பாடசாலைகளில் இருந்து ஆய்வு மாதிரிகளாகத் தெரிவு செய்யப்பட்ட கனிஷ்ட இடைநிலைப்பிரிவு மாணவர்கள், ஆசிரியர்கள் மூலம் பெற்றுக்கொண்ட தரவுகளை அடிப்படையாகக் கொண்டு பகுப்பாய்வு செய்து பிரச்சினைகளை இனங்கண்டு அதற்கான தீர்வுகளும் ஆலோசனைகளும் முன்வைக்கப்பட்டுள்ளன.

**திறவுச் சொற்கள் :** ஜோன்டியு, பயன்பாட்டு வாதம், கற்பித்தல் முறைகள்

*Department of Education and Early Childcare, Eastern University, Sri Lanka*